## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஏழாம் பத்து

### பத்தாம் திருவாய்மொழி - இன்பம் பயக்க
### இன்பக்கவி பாடுவித்த ஸ்ரீமந்நாராயணனை ஆழ்வார் திருவாறன்விளையில் சென்று கண்டு அடிமை செய்யக் கருதல்

** இன்பம் பயக்க எழில் மலர்
மாதரும் தானும் * இவ்வேழுலகை *
இன்பம் பயக்க இனிது உடன்
வீற்றிருந்து * ஆள்கின்ற எங்கள் பிரான் **
அன்புற்று அமர்ந்து உறைகின்ற *
அணி பொழில் சூழ் திருவாறன்விளை *
அன்புற்று அமர்ந்து வலம் செய்து *
கை தொழும் நாள்களும் ஆகுங்கொலோ? 1

ஆகுங்கொல்? ஐயம் ஒன்றின்றி *
அகல் இடம் முற்றவும் ஈரடியே *
ஆகும் பரிசு நிமிர்ந்த *
திருக் குறள் அப்பன் அமர்ந்து உறையும் **
மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு *
மதிள் திருவாறன்விளை *
மா கந்த நீர் கொண்டு தூவி வலம்
செய்து * கை தொழக் கூடுங்கொலோ? 2

கூடுங்கொல்? வைகலும் * கோவிந்தனை
மதுசூதனைக் கோள் அரியை *
ஆடும் பறவை மிசைக் கண்டு *
கை தொழுது அன்றி அவன் உறையும் **
பாடும் பெரும் புகழ் நான்மறை *
வேள்வி ஐந்து ஆறு அங்கம் பன்னினர் வாழ் *
நீடு பொழில் திருவாறன்விளை
தொழ * வாய்க்குங்கொல்? நிச்சலுமே 3

வாய்க்குங்கொல்? நிச்சலும் * எப்பொழுதும்
மனத்து ஈங்கு நினைக்கப் பெற *
வாய்க்கும் கரும்பும் பெருஞ்செந்நெலும் *
வயல் சூழ் திருவாறன்விளை **
வாய்க்கும் பெரும் புகழ் மூவுலகு ஈசன் *
வட மதுரைப் பிறந்த *
வாய்க்கும் மணி நிறக் கண்ண பிரான்
தன் * மலர் அடிப் போதுகளே 4

மலர் அடிப் போதுகள் என் நெஞ்சத்து
எப்பொழுதும் * இருத்தி வணங்க *
பலர் அடியார் முன்பு அருளிய *
பாம்பணை அப்பன் அமர்ந்து உறையும் **
மலரின்ல் மணி நெடு மாடங்கள்
நீடு * மதிள் திருவாறன்விளை *
உலக மலி புகழ் பாட * நம் மேல்
வினை ஒன்றும் நில்லா கெடுமே 5

ஒன்றும் நில்லா கெடும் முற்றவும்
தீவினை * உள்ளித் தொழுமின் தொண்டீர்! *
அன்று அங்கு அமர் வென்று உருப்பிணி
நங்கை * அணி நெடுந்தோள் புணர்ந்தான் **
என்றும் எப்போதும் என் நெஞ்சம்
துதிப்ப * உள்ளே இருக்கின்ற பிரான் *
நின்ற அணி திருவாறன்விளை
என்னும் * நீள் நகரம் அதுவே 6

நீணகரம் அதுவே மலர்ச்
சோலைகள் சூழ் * திருவாறன்விளை *
நீணகரத்து உறைகின்ற பிரான் *
நெடுமால் கண்ணன் விண்ணவர் கோன் **
வாணபுரம் புக்கு முக்கண் பிரானைத்
தொலைய * வெம்போர்கள் செய்து *
வாணனை ஆயிரந்தோள் துணித்தான் *
சரண் அன்றி மற்றொன்று இலமே 7

அன்றி மற்றொன்று இலம் நின் சரணே
என்று * அகல் இரும் பொய்கையின் வாய் *
நின்று தன் நீள் கழல் ஏத்திய *
ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த பிரான் **
சென்று அங்கு இனிது உறைகின்ற *
செழும் பொழில் சூழ் திருவாறன்விளை *
ஒன்றி வலஞ்செய்ய ஒன்றுமோ? *
தீவினை உள்ளத்தின் சார்வு அல்லவே 8

தீவினை உள்ளத்தின் சார்வு அல்ல ஆகித் *
தெளி வீசும்பு ஏறல் உற்றால் *
நாவின் உள்ளும் உள்ளத்து உள்ளும் *
அமைந்த தொழிலின் உள்ளும் நவின்று **
யாவரும் வந்து வணங்கும்
பொழில் * திருவாறன்விளை அதனை *
மேவி வலம் செய்து கை தொழக்
கூடுங்கொல்? என்னும் * என் சிந்தனையே 9

சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத்
தன்மை * தேவ பிரான் அறியும் *
சிந்தையினால் செய்வ தான் அறியாதன *
மாயங்கள் ஒன்றும் இல்லை **
சிந்தையினால் சொல்லினால் செய்கையால் *
நிலத் தேவர் குழு வணங்கும் *
சிந்தை மகிழ் திருவாறன்விளை
உறை * தீர்த்தனுக்கு அற்ற பின்னே 10

** தீர்த்தனுக்கு அற்ற பின் * மற்றோர்
சரண் இல்லை என்று எண்ணி * தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனன் ஆகிச் *
செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீர்த்தங்கள் ஆயிரத்துள் * இவை
பத்தும் வல்லார்களை * தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து
நல்கி உரைப்பர் * தம் தேவியர்க்கே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---